## History Model Test Questions 4 in Tamil With Answers

1. இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ. 1861 **ஆ. 1885** இ. 1892 ஈ. 1902

2. மிண்டோ-மார்லி சீர்திருத்தம் குறிப்பிடுவது

அ. மாகாண சுயாட்சி ஆ. இந்தியப் பிரிவினை

இ. இரட்டை ஆட்சி **ஈ. தனிப்பட்ட வாக்கமைப்பு**

3. பின்வருவனவற்றுள் சரியாக பொருத்தப்படாதது எது?

அ. அமிர்த பசார் பத்திரிக்கை - கல்கத்தா

ஆ. டைம்ஸ் ஆஃப் இந்தியா - லாகூர்

**இ. தி இந்து - சென்னை**

ஈ. வாய்ஸ் ஆஃப் இந்தியா - பஞ்சாப்

4. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட காங்கிரஸ் தலைவர்

அ. கோகலே ஆ. நேரு

இ. அன்னிபெசண்ட் **ஈ. காந்தி**

5. இஸ்லாமியருக்கு தனிநாடு தேவை என்றவர்

அ. நவாப் சலிம் முல்லா ஆ. அலிசகோதரர்கள்

**இ. ஜின்னா** ஈ. ஜவஹர்லால் நேரு

6. ஜாலியன் வாலாபாக் படுகொலையில் சம்பந்தப்படுத்தப்பட்ட நபர்

அ. கலெக்டர் ஜாக்சன் **ஆ. ஜெனரல் டையர்**

இ. கலெக்டர் லூசிங்டன் ஈ. ஜெனரல் கரியப்பா

7. காந்தி எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்தது

அ. ஆங்கிலேயரை எதிர்க்க ஆ. மதுவிலக்கு அமலாக

**இ. வகுப்புவாதத்தை எதிர்க்க** ஈ. தீண்டாமை

8. சுயராஜ்யம் என்ற சொல்லை 1906ஆம் ஆண்டு முதன் முதலில் பயன்படுத்திய இந்தியர் யார்?

அ. பி.ஜி.திலக் **ஆ. தாதாபாய் நௌரோஜி**

இ. கோபால கிருஷ்ண கோகலே ஈ. லாலா லஜபதி ராய்

9. வெள்ளையனே வெளியேறு என்ற முடிவை இந்திய தேசிய காங்கிரஸ் எந்த மாநாட்டில் எடுத்தது?

அ. லாகூர் மாநாடு **ஆ. பாம்பே மாநாடு**

இ. கல்கத்தா மாநாடு ஈ. லக்னோ மாநாடு

10. ஆங்கில அரசுக்கு எதிராக செய் அல்லது செத்துமடி என குரல் கொடுத்தது?

அ. ஜின்னா ஆ. நேதாஜி

**இ. காந்திஜி** ஈ. சரோஜினி நாயுடு

11. கீழே கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்துக.

1. சைமன் கமிஷன் 2. வட்டமேஜை மாநாடுகள்

3. நேரு அறிக்கை 3. பூனா ஒப்பந்தம்

சரியான வரிசை

அ. 3,1,4,2 **ஆ. 1,3,2,4** இ. 4,3,2,1 ஈ. 2,3,4,1

12. தண்டி யாத்திரையை மகாத்மா காந்தி மேற்கொண்டதன் காரணம்

**அ. உப்பு சத்தியாகிரகத்திற்காக** ஆ. முஸ்லீம் பிரச்சனைக்காக

இ. பூரன சுதந்திரம் அடைவதற்காக

ஈ. வெளிநாட்டு பொருட்களின் மீது மறுப்பை தெரிவிப்பதற்காக

13. ஜாலியன் வாலாபாக் கொடூரம் நடைபெற்ற ஆண்டு

அ. 1927 ஆ. 1915 **இ. 1919** ஈ. 1937

14. இந்திய சுதந்திர சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

அ. 1935 **ஆ. 1947** இ. 1950 ஈ. 1942

15. எந்த நிகழ்ச்சி காங்கிரஸ் கட்சியையும் முஸ்லீம் லீக் கட்சியையும் ஒன்றாக இணைத்தது?

**அ. கிலாபத் இயக்கம்** ஆ. சுதேசி இயக்கம்

இ. வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ. உப்பு சத்தியாகிரகம்

16. இவர்களில் ஒரே பதவியை இரு வேறுபட்ட காலங்களில் வகித்தவர் யார்?

**அ. இராஜாஜி** ஆ. டி.பிரகாசம்

இ. ஓ.பி.ராமசாமி ரெட்டியார் ஈ. பி.எஸ்.குமாரசாமி ராஜா

17. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. உப்பு சத்தியாக்கிரகம் | 1. நேரு |
| ஆ. பெண் விடுதலை | 2. இந்திராகாந்தி |
| இ. பஞ்சசீல கொள்கை | 3. பெரியார் |
| ஈ. இருப்பது அம்சத்திட்டம் | 4. காந்திஜி |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| ஆ. | 2 | 3 | 1 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| **இ.** | **4** | **3** | **1** | **2** |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

18. சிந்து சமவெளி நாகரீகம் என்பது

அ. புதிய கற்காலத்தை சேர்ந்தது ஆ. இரும்பு காலத்தைச் சேர்ந்தது

**இ. வெண்கல காலத்தை சேர்ந்தது** ஈ. இவற்றில் எதுவுமில்லை

19. சபா, சமிதி அமைப்புகளை உருவாக்கியவர்

அ. **ஆரியர்கள்** ஆ. திராவிடர்கள்

இ. பல்லவர்கள் ஈ. சோழர்கள்

20. குப்தர்களின் பரம்பரையை தோற்றுவித்தவர்

**அ. ஸ்ரீகுப்தர்** ஆ. சந்திரகுப்தர்

இ. குமார குப்தர் ஈ. விஷ்ணு குப்தர்

21. இந்திய செப்போலியன் என்ற பட்டம் பெற்ற மன்னர்

அ. சந்திர குப்த விக்ரமாதித்தன் ஆ. அசோகர்

**இ. சமுத்திர குப்தர்** ஈ. கனிஷ்கர்

22. இந்திய மாக்கியவல்லி என்று அழைக்கப்பட்ட அறிஞர் யார்?

அ. யுவான் சுவாங் **ஆ. கௌடில்யர்**

இ. ராஜாதோடர்மால் ஈ. வித்யாரண்ய

23. கீழ்க்கானும் எந்த இணை சரியாகப் பொருந்தியுள்ளது?

அ. காஞ்சி - சோமர்

**ஆ. வஞ்சி - சேரர்**

இ. மதுரை - பல்லவர்

ஈ. தஞ்சாவூர் - பாண்டியர்

24. பின்வரும் சொற்றொடர்களில் எது சரியானது?

அ. கஜினி முகமது இந்தியாவின் மீது படையெடுத்து முஸ்லீம்களின் ஆட்சியை நிறுவ நாடினார்.

ஆ. கஜினி முகமது இந்தியாவின் மீது படையெடுத்து இஸ்லாம் சமயத்தை பரப்ப எண்ணினார்.

**இ. கஜினி முகமதுவின் நோக்கம் படையெடுப்பின் மூலம் இந்தியாவை கொள்ளையடித்து செல்வ செழிப்படைவதேயாகும்.**

ஈ. இவைகளில் எதுவுமில்லை

25. அடையாள பணத்தை அறிமுகப்படுத்தி தோல்வி கண்ட டெல்லி சுல்தானிய மன்னர்

அ. இல்டுட்மிஷ் ஆ. பால்பன்

**இ. முகமது பின் துக்ளக்** ஈ. அலாவுதீன் கில்ஜி

26. விஜய நகரப் பேரரசு தோன்ற காரணமாக இருந்தவர்

அ. சாணக்கியர் அ. தாதாஜி கொண்டட தேவ்

**இ. வித்யாரண்ய** ஈ. பைரம்கான்

27. அக்பரின் பல்வேறு வகை செயல்பாடுகளின் முக்கிய நோக்கம்

அ. இந்து முஸ்லீம் ஒற்றுமை

**ஆ. முகலாயப் பேரரசை வலிமைப்படுத்துவது**

இ. சிறந்த ஆட்சி நிர்வாகத்தை அளிப்பது

ஈ. ஒரு புதிய மதத்தை தோற்றுவிப்பது

28. கீழே உள்ளதில் பொருத்தமானது எது?

**அ. அக்பரின் மதம் - தீன் இலாஹி**

ஆ. ஹீமாயூன் - அதிர்ஷடசாலி மன்னன்

இ. ஷெர்ஷா சூரி - மொகலாய மன்னர்

ஈ. நூர்ஜஹான் - ஜஹாங்கீரின் முதல் மனைவி

29. இரண்டாம் தரெயின் போரில் முகமது கோரியுடன் சண்டையிட்ட ராஜபுத்திர மன்னர்

அ. ரானா சங்கர் ஆ. ஜெயச்சந்திரன்

**இ. பிருதிவிராஜ்** ஈ. கடோத்கஜன்

30. இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு அனுமதி வழங்கிய மொகலாய மன்னர்

**அ. ஜஹாங்கீர்** ஆ. அக்பர்

இ. ஔரங்கசீப் ஈ. ஷாஜகான்

31. முதல் கர்நாடகப் போர் நடந்தது

அ. 1749 – 54 **ஆ. 1744 – 48** இ. 1756 – 63 ஈ. 1767 – 69

32. இராஜாராம் மோகன்ராய் நிறுவிய சமாஜம்

அ. ஆரிய சமாஜம் ஆ. பிரார்த்தனா சமாஜம்

**இ. பிரம்ம சமாஜம்** ஈ. தியோஸ்பிகல் சொஸைட்டி

33. இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்ட ஆண்டு

அ. 1835 **ஆ. 1885** இ. 1906 ஈ. 1875

34. தலசுய ஆட்சி வளர்ச்சியுற்ற காலம்

அ. மேயோ பிரபு **ஆ. ரிப்பன் பிரபு**

இ. கானிங் பிரபு ஈ. டல்ஹெளசி பிரபு

35. இந்திய கல்விக்காக எந்த சட்டம் நிதி உதவி வழங்கியது?

**அ. 1813ம் ஆண்டு பட்டைய சட்டம்**

ஆ. 1833ம் ஆண்டு பட்டைய சட்டம்

இ. 1853ம் ஆண்டு பட்டைய சட்டம்

ஈ. 1858ம் ஆண்டு கவுன்சில் சட்டம்

36. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. 1909 | 1. செளரி செளரா வன்முறை |
| ஆ. 1919 | 2. சைமன் தூதுக் குழு அமைப்பு |
| இ. 1927 | 3. இந்திய அரசுச் சட்டம் |
| ஈ. 1922 | 4. இந்திய கவுன்சில் சட்டம் |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 2 | 4 |
| **ஆ.** | **4** | **3** | **2** | **1** |
| இ. | 4 | 2 | 3 | 1 |
| ஈ. | 1 | 3 | 4 | 2 |

37. பின்வரும் நபர்களை காலவரிசைப்படி எழுதுக.

1. ரிப்பன் பிரபு 2. கர்சான் பிரபு 3. டல்ஹௌசி பிரபு 4. கானிங் பிரபு

குறியீடுகள்

அ. 3,2,4,1 ஆ. 3,4,2,1 **இ. 3,4,1,2** ஈ. 2,3,4,1

38. வங்காளப் பிரிவினையை ரத்து செய்த ஆண்டு

அ. கி.பி 1907 ஆ. கி.பி. 1909 **இ. கி.பி. 1911** ஈ. கி.பி. 1913

39. இந்தியாவின் தலைநகர் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்ட ஆண்டு

அ. கி.பி, 1910 **ஆ. கி.பி. 1911** இ. கி.பி. 1912 ஈ. கி.பி. 1909

40. ஜாலியன் வாலாபாக்கில் கூடியிருந்த மக்கள் மீது சுடுவதற்கு கட்டளையிட்டவர் யார்?

**அ. ஜெனரல் டயர்** ஆ. நீதிபதி ரௌலட்

இ. செம்ஸ் போர்டு பிரபு ஈ. மாண்டெகு

41. சைமன் தூதுக்குழு இந்தியாவிற்கு வருகை தந்த வருடம்

அ. கி.பி. 1925 ஆ. கி.பி. 1926 இ. கி.பி. 1927 **ஈ. கி.பி. 1928**

42. சைமன் தூதுக்குழுவை காங்கிரஸ் தலைவர்கள் பகிஷ்கரித்தற்கு காரணம்

அ. அது வெறும் கண்துடைப்பென்று அவர்கள் கருதினர்

ஆ. தூதுக்குழுவில் உள்ளவர்கள் இந்தியாவைப் பற்றி தவறான எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர்

**இ. தூதுக்குழுவில் இருந்த எல்லாருமே ஆங்கிலேயர்களாக இருந்தனர்.**

ஈ. அது இந்தியர்களின் தேவையை பூர்த்தி செய்யுமென்று அவர்கள் கருதவில்லை.

43. சுதந்திரம் என்பது நமது பிறப்புரிமை ; அதை நாம் அடைந்தே தீருவொம்- என்று முழங்கியவர் யார்?

அ. லாலா லஜபதிராய் ஆ. மகாத்மா காந்தி

இ. ஜவஹர்லால் நேரு **ஈ. பாலகங்காதர திலகர்**

44. இந்திய தேசிய முஸ்லீம் லீக்கை நிறுவியவர்கள்

**அ. ஆகாகானும், நவாப் சலி முல்லாவும்**

ஆ. முகமது அலியும், சௌகத் அலியும்

இ. முகது அலி ஜின்னாவும், ஆகாகானும்

ஈ. சர்.சையது அகமது கானும், நவாப் சலி முல்லாவும்

45. பாகிஸ்தான் என்ற தனிநாடு கோரிக்கையை திரு.ஜின்னா முன்வைத்த வருடம்

அ. கி.பி. 1924 **ஆ. கி.பி. 1940** இ. கி.பி. 1946 ஈ. கி.பி. 1935

46. வகுப்பு வாத இடஒதுக்கீடு சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதற்கு காரணம்

அ. சத்தியாகிரக போராட்டம் ஆ. கடும் எதிர்ப்பு

**இ. காந்திஜியின் உண்ணாவிரதம்** ஈ. சட்ட மறுப்பு இயக்கம்

47. வெள்ளையனே வெளியேறு இயக்கம் கோரியது

அ. இந்தியாவை விட்டு முஸ்லீம்கள் வெளியேறுதல்

**ஆ. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுதல்**

இ. எல்லா வெளி நாட்டவருடைய வெளியேற்றம்

ஈ. இவற்றில் எதுவுமில்லை

48. 1946-இல் அமைக்கப்பட்ட இடைக்கால அரசுக்கு தலைமை வகுத்தது

**அ. ஜவஹர்லால் நேரு** ஆ. காந்திஜி

இ. வல்லபாய் படேல் ஈ. சி. இராஜகோபாலாச்சாரி

49. மூன்றாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டவர்

அ. காந்திஜி ஆ. ஜவஹர்லால் நேரு

இ. சுபாஷ் சந்திரபோஸ் **ஈ. இவர்களில் எவருமில்லை**

50. பின்வரும் நிகழ்ச்சிகளில் 1942 ஆம் ஆண்டுடன் தொடர்புடையது

அ. சைமன் தூதுக்குழு ஆ. வேவல் திட்டம்

**இ. கிரிப்ஸ் தூதுக்குழு** ஈ. வகுப்புவாத பிரதிநிதித்துவம்

51. ஆரம்ப நிலையில் இந்திய காங்கிரசுடன் ஆங்கிலேயரின் நடவடிக்கை

அ. கடுமையாக இருந்தது

ஆ. கருத்து வேற்றுமையுடன் விளங்கியது

**இ. தாராளத் தன்மையும், நட்பும் கொண்டு விளங்கியது**

ஈ. இவற்றில் எவையுமில்லை

52. வந்தே மாதரம் என்ற கோஷத்தை உருவாக்கியவர்

**அ. பங்கிம் சந்திர சாட்டர்ஜி** ஆ. ரவிந்திர நாத் தாகூர்

இ. இராஜாராம் மோகன்ராய் ஈ. சுபாஷ் சந்திர போஸ்

53. இந்தியாவின் முதுபெரும் மனிதர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

அ. அப்துல் கஃபார்கான் ஆ. காந்திஜி

**இ. தாதாபாய் நௌரோஜி** ஈ. பக்ருத்தின் தி யாப்ஜி

54. கி.பி. 1905 ஆம் ஆண்டு வரை இந்திய தேசிய காங்கிரசின் ஆதிக்கம் செலுத்தியது

**அ. மிதவாதிகள்** ஆ. தீவிரவாதிகள்

இ. புரட்சியாளர்கள் ஈ. பகுத்தறிவாளர்கள்

55. சுயராஜ்ய கட்சியை ஆரம்பித்தது

அ. சி.ஆர்.தாஸும் ஜவஹர்லால் நேருவும்

**ஆ. மோதிலால் நெருவும், சி.ஆர்.தாஸும்**

இ. பி.ஜி.திலக்கும், அன்னி பெசண்ட்டும்

ஈ. சுபாஷ் சந்திரபோஷ்ம், சி.ஆர்.தாஸும்

56. பூமிதான இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

அ. காந்தியடிகள் ஆ. ஜவஹர்லால் நேரு

**இ. வினோபாபவே** ஈ. பாலகங்காதர திலகர்

57. காந்திஜிக்கு 'தேசப்பிதா' என்று பட்டமளித்தவர் யார்?

அ. ரவீந்திரநாத் தாகூர் **ஆ. சுபாஷ் சந்திர போஸ்**

இ. ராஜாஜி ஈ. காமராஜர்

58. இந்தியாவில் எப்போது முதலாவதாக ஒட்டப்படக்கூடிய அச்சிடப் பெற்ற அஞ்சல் வில்லைகள் ஆரம்பிக்கப்பட்டது?

அ/ மார்ச் 31, 1774 **ஆ. அக்டோபர் 1, 1854**

இ. நவம்பர், 1902 ஈ. ஜனவரி 1, 1956

59. மனுஸ்மிரிதி என்பது கீழ்க்கண்ட ஒன்றோடு தொடர்பு கொண்டுள்ளது

அ. பொருளாதாரம் ஆ. அரசியல்

இ. மாநில கிராப்டு **ஈ. சட்டம்**

60. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று மட்டும் சரியாக பொருந்தவில்லை?

அ. மெகஸ்தனிஸ் - இண்டிகா

**ஆ. திரிபீடங்கள் - ஜைன சமயம்**

இ. இட்சிங் - ஜப்பானிய பயணி

ஈ. நிக்கலோ காண்ட்டி - இத்தாலியப் பயணி

61. ஹரப்பா முத்திரைகள் இதனால் செய்யப்பட்டவை

**அ. சுட்டமண்** ஆ. செம்பு இ. இரும்பு ஈ. ஈயம்

62. வேத கால நாகரீகம் ஒரு கிராமிய நாகரீகம் ஏனென்றால், அவர்கள்

அ. நிலங்களை பயிர் செய்தனர் ஆ. ஆடுமாடுகளை வளர்த்தனர்

**இ. மேய்ச்சல் வாழ்க்கை நடத்தினர்** ஈ. கிராமங்களில் வாழ்ந்தவர்

63. மௌரியர்கள் முந்தைய காலத்தில் நிகழ்ந்த முக்கிய நான்கு நிகழ்ச்சிகள் தரப்பட்டுள்ளன. அவை நிகழ்ந்த காலக்கிரம அடிப்படையில் அமைந்த சரியான வரிசையை காண்க.

அ. மகாவீரர் பிறப்பு, அலெக்ஸாண்டர் படையெடுப்பு, இராணியர் படையெடுப்பு, புத்தர் பிறப்பு

ஆ. அலெக்ஸாண்டர் படையெடுப்பு, புத்தர் பிறப்பு, இராணி படையெடுப்பு, மகாவீரர் பிறப்பு

**இ. புத்தர் பிறப்பு, மகாவீரர் பிறப்ப், இராணியர் படையெடுப்பு, அலெக்ஸாண்டர் படையெடுப்பு**

ஈ. இராணியர் படையெடுப்பு, அலெக்ஸாண்டர் படையெடுப்பு, மகாவீரர் பிறப்பு, புத்தர் பிறப்பு

64. கூற்று (A) : குப்தர் காலம் சமஸ்கிருத இலக்கியத்தின் மறுமலர்ச்சியை கண்டது.

காரணம்®: குப்தர் காலம் அமைதி மற்றும் வளமான காலம்

கீழே கொடுத்துள்ள குறியீடு முறைகளுக்கேற்ப உமது விடையை தேர்வு செய்க.

அ. (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல**

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) உண்மை

65. முகமது பின்காசிம் சிந்துவை தாக்கிய ஆண்டு

அ. கி.பி. 710 ஆ. கி.பி. 711 **இ. கி.பி, 712** ஈ. கி.பி. 715

66. சோழர்கள் காலத்தில் ஏராளமான இந்து கோயில்கள் உருவாக்கப்பட்டன. ஏனெனில்

**அ. சோழ அரசர்கள் கலை மற்றும் கட்டிட கலையை ஆதரித்தனர்**

ஆ. சோழர்கால சமுதாயத்தில் அமைதி நிலவியது

இ. நாடு பொருளாதார செழிப்பு பெற்றிருந்தது

ஈ. ஏராளமான கலைஞர்கள் இருந்தனர்

winmeen.com

67. மாலிக்காபூரின் தென்னிந்திய படையெடுப்புகளை சரியாக வரிசைப்படுத்துக.

1. மதுரை 2. வாரங்கல் 3. தேவசிரி 4. துவாரக சமுத்திரம்

சரியான வரிசை

அ. 2,3,1,4 **ஆ. 3,2,4,1** இ. 4,1,2,3 ஈ. 4,3,1,2

68. இல்ட்டுமிஷ் சம்பந்தமாக பின்வரும் கூற்றுகளில் எவை உண்மையானவை?

1. அவர் நிர்வாக ஸ்தாபனங்கட்கு அடித்தளம் அமைத்தார்

2. அவர் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், தலைசிறந்த கவிஞர்களையும், அறிஞர்களையும் அழைத்தார்

3. அவர் ஷியாக்களின் மீது நடவடிக்கை எடுத்தார்

4. அவர், இந்தியாவில் குழந்தை முஸ்லீம் பேரரசை பாதுகாக்கவில்லை

குறியீடுகள்

அ. 1 மட்டும் சரியானது **ஆ. 1 மற்றும் 2 சரியானவை**

இ. 1,2 மற்றும் 3 சரியானவை ஈ. அனைத்தும் சரியானவை

69. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. பல்லவ அரசர் | 1. மங்கேளசா |
| ஆ. சாளுக்கிய அரசர் | 2. விஜயாலயா |
| இ. ராஷ்டிரகூட அரசர் | 3. பரமேஷ்வரா II |
| ஈ. சோழ அரசர் | 4. தந்தி துர்கா |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| **ஆ.** | **3** | **1** | **4** | **2** |
| இ. | 4 | 2 | 3 | 1 |
| ஈ. | 1 | 3 | 2 | 4 |

70. வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது அரச துரோக குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஏனென்றால்

அ. அவர் ஆங்கில பாரம்பரியத்தை அவமதித்தார்

ஆ. ஊழல்களில் திளைத்திருந்தார்

**இ. ராஜா நந்தகுமாரை தூக்கிலிட்டார். அவுத்பேகம்களை அவமதித்தார்**

ஈ. சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியுடன் ஒத்துழையாகாமலிருந்து

71. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. வங்காளத்தில் இரட்டை அரசு | 1. காரன்வாலிஸ் |
| ஆ. நிரந்தர நிலவரித்திட்டம் | 2. வெல்லஸ்லி |
| இ. துணைப்படைத் திட்டம் | 3. பெண்டிங் |
| ஈ. சதி ஒழிப்பு | 4. இராபர்ட் |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **2** | **3** |
| ஆ. | 3 | 2 | 1 | 4 |
| இ. | 1 | 4 | 3 | 2 |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

72. கர்சன் பிரபு இந்தியர்களினால் எப்பொழுதும் நினைக்கப்படுகிறார். ஏனெனில், அவர்

அ. பூசாவில் விவசாய ஆராய்ச்சி மையத்தை நிறுவினார்

ஆ. தொல்பொருள் துறையை தோற்றுவித்தார்

இ. 1905ல் விக்டோரியா நினைவிடத்தை தோற்றுவித்தார்

**ஈ. 1905ல் வங்காளத்தை பிரித்தார்**

73. கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் இப்போரோடு சம்பந்தப்பட்டது

அ. இரண்டாம் பர்மியப் போர்

**ஆ. 1857ம் ஆண்டு கலகம்**

இ. வேலூர் கலகம்

ஈ. ஜாலியன்வாலாபாக் படுகொலை

74. பல்கலைக்கழக மானியக் குழு நிறுவப்பட்டது

அ. இந்தியாவில் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்காக

ஆ. பல்கலைக்கழகங்களின் இயக்கங்களை ஒழுங்குப்படுத்துவதற்காக

**இ. பல்கலைக்கழக கல்வியினை மானியமளித்து ஊக்குவிக்க**

ஈ. ஆங்கில கல்வியினை மேம்படுத்துவதற்காக

75. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. ஆரிய சமாஜம் விக்கிரக ஆராதனையை எதிர்த்தது.

2. ஆரிய சமாஜம் சாதி முறையை எதிர்த்தது.

winmeen.com

3. ஆரிய சமாஜம் சடங்குகளை எதிர்த்தது.

4. ஆரிய சமாஜம் வேதகாலப் பண்பாட்டை புதுப்பிக்க எண்ணியது.

இவற்றில்,

அ. 1 மற்றும் 2 சரியானவை ஆ. 1,2 மற்றும் 3 சரியானவை

**இ. அனைத்தும் சரியானவை** ஈ. 4 மட்டும் சரியானது

76. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாக பொருந்தியுள்ளது?

அ. ஹண்டர் கமிஷன் - பல்கலைக்கழக கல்வி

ஆ. ராலே கமிஷன் - இலவச ஆரம்பக் கல்வி

இ. ராதா கிருஷ்ண கமிஷன் - கல்விக்கு அரசு நிதி உதவி அதிகரிப்பு

**ஈ. சார்ஜண்ட் கல்வித் திட்டம் – தாய் மொழிக்கல்வி ஊக்குவிப்பு**

77. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி துவங்கப்பட்ட ஆண்டு

அ. கி.பி. 1500 **ஆ. கி.பி. 1600** இ. கி.பி. 1664 ஈ. கி.பி. 1744

78. காந்தியை கூறுவது

**அ. தேசிய தந்தை** ஆ. இந்தியாவின் தந்தை

இ. இந்தியாவை உருவாக்கியவர் ஈ. தற்கால இந்தியாவின் தந்தை

79. விஜய நகர பேரரசை ஆண்ட வம்சங்களை காலவரிசைக் கிரமப்படி வரிசைப்படுத்துக.

1. துளுவ வம்சம் 2. சங்கம வம்சம்

3. சாளுவ வம்சம் 4. அரவீட வம்சம்

சரியான கால வரிசை

அ. 4,3,2,1 ஆ. 3,4,1,2 **இ. 2,3,1,4** ஈ. 4,1,2,3

80. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

1. மகேந்திர வர்மன் - குகை கோயில்கள்

2. முதலாம் நரசிம்மவர்மன் - பாறை வெட்டு கோயில்கள்

3. இரண்டாம் நரசிம்மவர்மன் - கட்டுமான கோயில்கள்

4. அபராஜித வர்மன் - கல் கோயில்கள்

இவற்றில்:

அ. 1 மற்றும் 2 சரி ஆ. 2 மற்றும் 3 சரி

இ. 3 மற்றும் 4 சரி **ஈ. 1,2 மற்றும் 3 சரி**

81. 1878ஆம் ஆண்டு வட்டார மொழிப் பத்திரிக்கை சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தவர்

**அ. லிட்டன் பிரபு** ஆ. ரிப்பன் பிரபு

இ. இர்வின் பிரபு ஈ. ஹார்டிஞ்ச் பிரபு

82. கீழ்க்கண்ட நினைவுச் சின்னங்களை அவற்றின் கால வரிசைக்கேற்ப வரிசைப்படுத்துக.

1. மோதி மசூதி 2. தின் புனா
3. புராணகில்லா 4. பதேபூர் சிக்ரி

சரியான கால வரிசை

அ. 4,1,2,3 ஆ. 2,4,1,3 இ. 3,4,1,2 **ஈ. 2,3,4,1**

83. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

1. பான்ஸ்லே - பெரார்
2. ஹோல்கர் - இந்துார்
3. சிந்தியா - பரோடா
4. பேஷ்வா - பூனே

இவற்றில்:

அ. 2,3 மற்றும் 4 சரி **ஆ. 1,2 மற்றும் 4 சரி**

இ. 1,3 மற்றும் 4 சரி ஈ. 1,2 மற்றும் 3 சரி

84. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. வி.டி. சவர்கர் அபிநவ் பாரத்தை துவக்கினார்
2. வி.டி. சவர்கர் 1909ல் லண்டனிலிருந்து ரகசியமாக கைத்துப்பாக்கிகளை நாசிக் மாவட்ட நீதிபதியைக் கொள்ளும் பொருட்டு அனுப்பினார்.
3. 1911 ஜுன் மாதம் வி.டி.சவர்கர் ஆஷ்-ஐ கொலை செய்தார்
4. பிரிட்டிஷார் 1919ல் வி.டி.சவர்கரை சுட்டுக் கொன்றனர்

இவற்றில்,

அ. 1 மட்டும் சரி **ஆ. 1 மற்றும் 2 சரி**

இ. 1,2 மற்றும் 3 சரி ஈ. அனைத்தும் சரியானவை

85. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

கூற்று (A): ஜாலியன் வாலாபாக் படுகொலை சுதந்திர போராட்டத்தில் காந்தியினை தீவிரமாக ஈடுபடுத்தியது.

காரணம்(R): இப்படுகொலை காந்திஜியின் உணர்வுகளை கடுமையாக புண்படுத்தியது.

கீழே கொடுத்துள்ள குறியீடு முறைகளுக்கேற்ப உமது விடையை தேர்வு செய்க.

**அ. (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) உண்மை

86. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. 1885 | 1. கிலாபத் இயக்கம் |
| ஆ. 1915 | 2. காந்தி-இர்வின் ஒப்பந்தம் |
| இ. 1920 | 3. ஹோம்ரூல் இயக்கம் |
| ஈ. 1931 | 4. இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கம் |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 1 | 4 | 3 |
| **ஆ.** | **4** | **3** | **1** | **2** |
| இ. | 3 | 2 | 4 | 1 |
| ஈ. | 1 | 2 | 4 | 3 |

87. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. சரோஜினி நாயுடு | 1. மீரட் |
| ஆ. கூட்டு சேராமை | 2. ஜெனரல் டயர் |
| இ. சிப்பாய் கலகம் | 3. இந்தியாவின் வானம்பாடி |
| ஈ. ஜாலியன் வாலாபாக் படுகொலை | 4. இந்திய வெளியுறவுக் கொள்கை |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **4** | **1** | **2** |
| ஆ. | 2 | 1 | 3 | 4 |
| இ. | 4 | 2 | 3 | 1 |
| ஈ. | 1 | 4 | 2 | 3 |

88. சர்தார் வல்லபாய் படேல் வரலாற்றில் நினைவு கொள்ளப்படுகிறார். ஏனெனில்

அ. அவர் ஒரு வெற்றிகரமான பாரிஸ்டர்

ஆ. அவர் லோக் சபையின் முதலாவது சபாநாயகர்

இ. அவர் இந்தியாவின் துணை பிரதமராக இருந்தவர்

**ஈ. இந்தியாவிற்கு அரசியல் ஒற்றுமையை கொண்டு வந்தவர்**

89. கீழ்க்கண்டவற்றுள் எவை கி.பி, 1857ஆம் ஆண்டு கலகத்திற்கு காரணமாக கருதப்படுகின்றன?

அ. அவுத் இணைக்கப்படுதல்

**ஆ. என்பீல்டு துப்பாக்கிக்கு கொழுப்பு தடவிய குண்டுகள் புகுத்தப்படுதல்**

இ. சதி ஒழிப்புசட்டம் இயற்றப்படுதல்

ஈ. மேற்கண்ட அனைத்துமே

90. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியாக பொருத்தப்பட்டுள்ளது?

அ. சித்தரஞ்சன் தாஸ் - தலைசிறந்த வயதான மனிதர்

ஆ. மதன்மோகன் மாளவியா - தேசபந்து

**இ. லாலா லஞ்பத்ராய் - ஷெர்-இ-பஞ்சாப்**

ஈ. தாதாபாய் நௌரோஜி - மகோமனோ

91. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க.

1. 1947 இந்திய சுதந்திர சட்டப்படி இந்தியா பிரிக்கப்பட்டது

2. இரண்டு சுதந்திரமான டொமினியன்களும் ஆகஸ்டு 14 – 15, 1947ல் உதயமாயின

3. ஜின்னா பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரல் ஆனார்

4. சி.ராஜகோபாலச்சாரி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவார்.

இவற்றில்,

அ. 1 மட்டும் சரி ஆ. 1 மற்றும் 2 சரி

**இ. 12, மற்றும் 3 சரி** ஈ. அனைத்தும் சரி

92. கீழ்க்கண்ட கூற்றினை ஆய்க.

கூற்று(A): லக்னோ ஒப்பந்தம் தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் காங்கிரஸில் மீண்டும் இணைத்தது.

காரணம்(R): லக்னோ ஒப்பந்தம் இன அடிப்படையில் தேர்தல் தொகுதிகளை அங்கீகரித்தது.

கீழே கொடுத்துள்ள குறியீடு முறைகளுக்கேற்ப உமது விடையை தேர்வு செய்க.

அ. (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ (A) மற்றும் (R) உண்மை, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல**

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) உண்மை

93. 1857ஆம் ஆண்டு புரட்சியை முதல் இந்திய சுதந்திர போர் என்று அழைத்தவர்

அ. ஆர்.சி.மசூம்தார் ஆ. பாராசந்த்

இ. எஸ்.என்.சென் **ஈ. வி.டி. சவர்கர்**

94. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. வேவல் பிரபு | 1. வகுப்பு வாத இட ஒதுக்கீடு |
| ஆ. வில்லிங்டன் பிரபு | 2. கிரிப்ஸ் தூதுக்குழு |
| இ. லினலித்கவ் பிரபு | 3. முதல் வட்ட மேஜை ஆநாடு |
| ஈ. இர்வின் பிரபு | 4. சிம்லா மாநாடு |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **2** | **3** |
| ஆ. | 1 | 3 | 4 | 2 |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| ஈ. | 2 | 4 | 3 | 1 |

95. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. பாண்டிச்சேரி | 1. வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| ஆ. காந்திஜி | 2. யூனியன் பிரதேசம் |
| இ. முதலாம் வட்டமேஜை மாநாடு | 3. பங்கிம் சந்திர சாட்டர்ஜி |
| ஈ. வந்தே மாதரம் | 4.நவம்பர் 1930 |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 2 | 3 | 1 |
| **ஆ.** | **2** | **1** | **4** | **3** |
| இ. | 1 | 3 | 2 | 4 |
| ஈ. | 3 | 4 | 1 | 2 |

96. இந்திய தேசிய காங்கிரஸில் பிளவு ஏற்பட்ட ஆண்டு

அ. கி.பி. 1905 ஆ. கி.பி. 1906 **இ. கி.பி. 1907** ஈ. கி.பி, 1908

97. ஹண்டர் குழு இதற்காக அமைக்கப்பட்டது

அ. சமூக சீர்திருத்தங்கள் ஆ. பொருளாதார சீர்திருத்தங்கள்

**இ. கல்வி சீர்திருத்தங்கள்** ஈ. நீதித்துறை சீர்திருத்தங்கள்

98. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. பாபு | 1. ஆர்.எம்.தாகூர் |
| ஆ. பியூரர் | 2. டி.பிரகாசம் |
| இ. குருதேவ் | 3. காந்திஜி |
| ஈ. ஆந்திர கேசரி | 4. ஹிட்லர் |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 2 | 4 |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 4 | 2 | 3 | 1 |
| **ஈ.** | **3** | **4** | **1** | **2** |

99. சோழர்கள் காலம்

**அ. கிராம சபைகளுக்கு பெயர் பெற்றது**

ஆ. இராஷ்டிரகூடருடன் நட்த்திய சண்டைக்கு பெயர் பெற்றது

இ. இலங்கையுடன் வாணிபம் செய்வதற்கு பெயர் பெற்றது

ஈ. தமிழ் கலாச்சாரத்தை முன்னேற்றியதற்கு பெயர் பெற்றது

100. இந்தியாவில் டாக்டர் அன்னிபெசண்ட் சாதனை

அ. தியோசாபிகல் சங்கத்தில் ஆற்றிய சமூக சேவை.

ஆ. பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது.

**இ. ஹோம்ரூல் (தன்னாட்சி) இயக்கத்தை துவக்கியது.**

ஈ. 1917ல் இந்திய தேசிய காங்கிரசின் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது.